(ஆ) ஆம் எனில் விஸ்தரிப்பு அலுவலகங்கள் எங்கு நிறுவப்படும்?

(இ) மதுரையில் உள்ளது போல் 100 கிளை நிலையங்கள் கொண்டதாக திருச்சிராப்பள்ளித் திட்டம் மாற்றப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :

(அ) லால்குடி பகுதியில் ஏற்கனவே தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. முசிறி மற்றும் துறையூர் பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) 50 கிளை நிலையங்கள் கொண்ட தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் சீராக இயங்குவதால், 100 கிளை நிலையங்களாக மாற்றும் உத்தேசம் இல்லை.

செங்கை மாவட்டத்திலுள்ள கோழிப் பண்ணைகள்

*வினா எண். 158— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டத்தில் எத்தனை கோழிப்பண்ணைகள் உள்ளன ?

(ஆ) காஞ்சீபுரத்தில் கோழிப்பண்ணை ஒன்று நிறுவும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) செங்கை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் பொறுப்பில் இரண்டு கோழிப்பண்ணைகளும், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் பொறுப்பில் கோழிப்பண்ணை ஒன்றும் மற்றும் கோழி வளர்ப்பு நிறுவனத்தின் உதவியுடன் சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 536 சிறு கோழிப்பண்ணைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) மற்றும் (இ) தற்சமயம் ஏதும் இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமான காஞ்சிமாநகரில் பலர் இந்தக் கோழிப்பண்ணை ஆரம்பிக்க விரும்புகிறார்கள். அவ்வாறு ஆரம்பிக்க இருக்கின்ற பண்ணைகளுக்கு என்னென்ன வகையில் அரசு உதவி செய்ய இயலும் என்பதை அறிய விரும்புகிறேன்.

1983 பிப்ரவரி 10]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே கோழிப்பண்ணையினை தனியார் ஆரம்பிக்க அவர்கள் சிறு விவசாயிகளாக இருந்தால், விவசாயத் தொழிலாளர்களாக இருந்தால் வங்கிகள் மூலமாக 100 கோழிகளுக்கான தொகை 5,865 ரூபாய் கடனாக மற்றும் மானியமாகக் கொடுத்தும், தற்போதைய பண்ணைகளுக்குக் கோழிகள் மாற்றுவதற்காக கடனுடன் விவசாயத் தொழிலாளர்களுக்கு 970 ரூபாய் அரசு மானியமாகவும், சிறு விவசாயிகளுக்கு 727 ரூபாய் மானியமாகவும் கொடுத்து அவர்களை இன்றைக்கு கோழி வளர்ப்புத் துறையில் முன்னேறுகின்ற வாய்ப்பை அரசு ஏற்படுத்தி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இது போன்ற கோழிப்பண்ணைகளை கூட்டுறவுத் துறையில் ஆரம்பித்து நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் நல்ல கருத்துக்கள் தான். ஆகவே அவர்களுடைய உணர்வுகளை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திற்குச் சொந்தமான கோழி உரிப்பகங்கள்

* வினா எண். 159—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) TAPCO விற்குச் சொந்தமாக கோழி (இறைச்சி) உரிக்குட (Dressing plant) எங்கெங்குள்ளன ?

(ஆ) அவைகள் நல்ல முறையில் இலாபகரமாக நடைபெறுகின்றனவா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திற்குச் சொந்தமாக, சென்னை அடையாறில் உள்ள மார்க்கெட்டிங் பிரிவில் மட்டும், ஒரு நவீன கோழி உரிப்பகம் உள்ளது.

(ஆ) இது அடையாறில் இயங்கும் விற்பனைப் பிரிவின் ஒரு அங்கமாகும். ஆதலால் இதற்கென்று தனியாக இலாப, நட்டக் கணக்கு கிடையாது.